//தனிக்கவம்// சிறப்பு // அவசரம்//

வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க.எண். 1802 /ஆ1/2022, நாள் : 06.06.2022

பொருள்: சிறுசேமிப்பு – வேலூர் மாவட்ட ஆட்சியரகம் – செல்வ மகள் சேமிப்புத் திட்டம் – திட்டத்தினை அனைத்து பெண் குழந்தைகளுக்கும் தெரியப்படுத்தி, விழிப்புணர்வு ஏற்படுத்துதல் – சம்பந்தமாக.

பார்வை :

1. வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் (சிறுசேமிப்புப் பிரிவு) அவர்களின் கடிதம் ந.க.எண்.பிடி1/167/2022, நாள். 30.05.2022.
2. சென்னை, சிறுசேமிப்புத் துறை ஆணையர் அவர்களின் கடித எண்.ஆ1/1101/2022, நாள்.19.04.2022.

#######

பார்வையில் காணும் கடிதங்களின்படி அஞ்சலகங்களில் செயல்பட்டு வரும் செல்வமகள் சேமிப்புத் திட்டத்தினை அனைத்து பொது மக்களுக்கும் தெரிவித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் படி கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. மத்திய அரசால் ஏற்படுத்தப்பட்ட செல்வமகள் சேமிப்பு திட்டம் பெண் குழந்தைகளை சமூகத்தில் அவர்களின் நிலையினை மேம்படுத்தவும், எதிர்காலத்தில் அவர்களின் நிலையினை மேம்படுத்தவும் ஏற்படுத்தப்பட்ட திட்டமாகும்.

இத்திட்டம் தொடர்பாக சார்ந்த மாவட்டக் கல்வி அலுவலர், வட்டாரக் கல்வி அலுவலர்கள் மற்றும் அனைத்து வகை பள்ளித் தலைமையாசிரியர்களும் வேலூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து பெண் குழந்தைகளுக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்தும்படி தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், செல்வமகள் சேமிப்புத் திட்டத்தின் சிறப்பு அம்சங்கள் குறித்த விவரம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளவாறு துண்டு பிரசுரங்கள் மற்றும் பேனர்களை அச்சடித்து விழப்புணர்வு ஏற்படுத்துமாறு சார்ந்த அலுவலர்களுக்கும் தலைமை ஆசிரியர்களுக்கும் தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு-

செல்வமகள் சேமிப்பு திட்ட-
சிறப்பு அம்சங்கள்

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர் :

1. மாவட்டக் கல்வி அலுவலர், வேலூர்.
2. வட்டாரக் கல்வி அலுவலர்கள், வேலூர் மாவட்டம்.
3. அனைத்து வகை பள்ளித் தலைமை ஆசிரியர்கள்
(ம) மெட்ரிக் பள்ளி முதல்வர்கள், வேலூர் மாவட்டம்.

நகல்-

வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் (சிறுசேமிப்பு பிரிவு)
(அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது)

//ப.த.//

# செல்வமகள் சேமிப்புத் திட்டம் - சிறப்பு அம்சங்கள்

| | |
|---|---|
| திட்டத்தின் பெயர் | : Sukanya Samiddhi Acount (SSA)<br>செல்வமகள் சேமிப்புத் திட்டம் |
| திட்ட வாய்ப்புகள் | : எந்த ஒரு அஞ்சலகத்திலும் முதலீடு செய்யலாம்.<br>7.6 வட்டி (மாறுதலுக்குபட்டது)<br>காலம்: 21 ஆண்டுகள், குறைந்தபட்ச முதலீடு ரூ.250/- பிறகு ரூ.50/- வீதம் அதிகரித்து செலுத்தலாம்.<br><br>ஒரு நிதியாண்டில் குறைந்தபட்சமாக ரூ.250/- அதிகபட்சமாக ரூ,1,50,000/- செலுத்தலாம்.<br><br>15 வருடங்கள் தொடர்ந்து செலுத்தி வர வேண்டும்.<br><br>குழந்தைகளின் மேல்படிப்பிற்காக 50 விழுக்காடு அளவு கடன் பெறலாம்.<br><br>முதிர்வு காலம் 21 ஆண்டுகள் அல்லது பெண் குழந்தையின் திருமணம் இதில் முதலில் வருவது<br><br>இதற்கு 80 சி படி வரிவிலக்கு உண்டு. |
| பயனாளிகள்/தகுதியான நபர்கள் | : பெற்றோர் / பாதுகாவலர் - குழந்தையின் 10 வயதுக்குட்பட்டு மட்டும் |
| தேவைப்படும் ஆவணங்கள் | : விண்ணப்ப படிவம்<br>ஆதார் கார்டு / குடும்ப அட்டை - இருப்பிடத்தை உறுதி செய்ய<br>வயது - உறுதி செய்ய ஆவணம்<br>பாஸ்போட் அளவு புகைப்படம் |
| எங்கே விண்ணப்பது | : அனைத்து தலைமை அஞ்சலகங்கள் மற்றும் அனைத்து சார் அஞ்சல் அலுவலகங்கள். |
| மாவட்ட அளவில் குறைகளை தெரிவித்து பரிகாரம் பெறம் இடம் | : அஞ்சலக கண்காணிப்பாளர்கள்<br>அஞ்சல் அலுவலர்கள்<br>மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(சிறுசேமிப்பு) |